

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமையன்று, தி.மு.க மாநில மருத்துவர் அணி துணைசெயலாளர் டாக்டர் திலிப் ராஜகண்ணப்பன் ஏற்பாட்டில் மாபெரும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் முகாமை துவக்கி வைத்தார். முன்னாள் அமைச்சர் மாவட்ட அவைத்தலைவர் சத்தியமூர்த்தி, மாநில விவசாய அணி துணைசெயலாளர் முருகவேல், ஒன்றிய செயலாளர்கள் பூபதிமணி, கோவிந்தராஜ், ஜெயபாலன், ஆறுமுகவேல், குலாம் முகைதீன், சண்முக நாதன், பொதுக்குழு உறுப்பினர் தனிக்கொடி, முதுகுளத்தூர் நகரச் செயலாளர் ஷாஜஹான் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்ட அயலக அணி சார்பாக கீழக்கரையில் மாபெரும் ரத்ததான முகாம் நடைபெற்றது முகாமினை இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், துவக்கி வைத்தார் இம்முகாமில் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தார்கள். அதனைத் தொடர்ந்து கீழக்கரையில் உள்ள இ.எஸ்.ஐ நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர்,சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், கலந்துகொண்டு துவக்கி வைத்தார்.



கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை டவுண் ஜாமியா பள்ளிவாசல் தெரு ஷாதுலியா லாவியா மதரசாவில் வைத்து கழக இளைஞரணி,நெல்லை ஷிபா மருத்துவமனை மற்றும் தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனை ஆகியவை இணைந்து இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் பங்கேற்று மேயர்.கோ. இராமகிருஷ்ணன்,துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் முகாமை துவக்கி வைத்தார்.



தென்காசி தெற்கு மாவட்டம் அய்யாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள மு.பி. பா அறக்கட்டளை சார்பிலும் அய்யாபுரம் கிளை கழக திமுக சார்பிலும் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவியருக்கு புத்தகப்பை இனிப்புகள் மற்றும் மதிய உணவினை மு.பி.பா நூலகத்தில் ஒன்றிய பிரதிநிதி மு.பி.பா அன்புச் செழியன் வழங்கினார். நிகழ்ச்சியில் கழக மூத்த முன்னோடி பாலசுப்பிரமணியன், தங்கராஜ், கிளை செயலாளர் செல்வகுமார், இளைஞரணி மணிவண்ணன், கே.சி.வேல்ராஜ், வி. முப்புடாதி, குருசாமி, திரவியம், பாலசுப்பிர மணியன், ராம்குமார், நூலகர் மகாஸ்ரீ, கனகராஜ் உட்பட நூலக வாசகர்கள் பள்ளி மாணவ, மாணவியர் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மக்களுக்கான என்னுடைய போராட்டம் தொடங்கிவிட்டது!

# பா.ஜ.க.விற்கு எந்தவிதமான அரசியல் மரியாதையும் தெரியாது!

## வயநாடு தொகுதியில் நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் பிரியங்கா காந்தி பேச்சு!

திருவனந்தபுரம்,டிச. 2- வயநாடு தொகுதியில் நேற்று நடைபெற்ற நன்றி அறிவிப்பு கூட்டத்தில் பிரியங்கா காந்தி எம்.பி. பேசினார். வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்ட பிரியங்கா காந்தி



4.10 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். நாடாளுமன்றத்தில் எம்.பி.யாக பொறுப்பேற்றார். இந்நிலையில் வயநாடு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக நேற்று முன்தினம் பிரியங்கா காந்தி வந்தார். அவருடன் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் வந்திருந்தார்.

மலப்புரம் மாவட்டத்திலுள்ள முக்கம் பகுதியில் நடந்த நன்றி அறிவிப்பு கூட்டத்தில் பிரியங்கா காந்தி பேசியதாவது:

நீங்கள் எனக்கு அளித்த அன்பிற்கு நான் என்னுடைய இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வயநாடு மக்களுக்கான என்னுடைய போராட்டம் தொடங்கிவிட்டது. உங்களுக்கு என்னென்ன பிரச்சினைகள் உள்ளன என்பது குறித்து எனக்கு நன்றாகவே தெரியும். அவை அனைத்தையும் தீர்த்து வைப்பது தான் என்னுடைய முதல் கடமையாகும்.

பா.ஜ.வுக்கு எந்த அரசியல் மரியாதையும் தெரியாது. நாட்டில் தேர்தல் நடைமுறைகள் குறித்த நம்பிக்கை போய்விட்டது. நாட்டை நிலை நிறுத்தும் அடிப்படை அம்சங்களுக்காக நாம் போராட வேண்டும். வயநாடு தொகுதி மக்களுக்காகத் தான் நான் நாடாளுமன்றத்தில் உள்ளேன். இவ்வாறு அவர் பேசினார்.

இதன் பின்னர் ராகுல் காந்தி பேசியது: நாம் அனைவரும் அன்பைக் குறித்து பேசும்போது பா.ஜ. வெறுப்பு அரசியல் குறித்து பேசுகிறது. வயநாட்டில் பேரழிவு ஏற்பட்ட போதிலும் மக்களுக்கு எந்த உதவியும் செய்ய மோடி தயாராக இல்லை. இந்திய அரசியலமைப்பை காப்பாற்றுவதற்காகத் தான் நாம் போராடுகிறோம்.

எல்லா இந்தியர்களும் சமம் என்றுதான் அரசியலமைப்பு கூறுகிறது. ஆனால் அதானிக்கு மட்டும் தான் சிறப்பு உரிமை என்று மோடி கூறுகிறார். சி.பி.ஐ. உள்பட எல்லா விசாரணை அமைப்புகளும் அவர்களது கைகளில் உள்ளது. ஆனால் எங்களது கைகளில் மக்களின் இதயங்கள் உள்ளன. பா.ஜ.வின் கொள்கைகளை தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து மலப்புரம் மாவட்டத்தில் 2 இடங்களில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு கூட்டங்களில் இருவரும் கலந்து கொண்டு பேசினர். அதன் பின்னர் ராகுல் காந்தி டெல்லி புறப்பட்டு சென்றார். பிரியங்கா காந்தி நேற்றும் வயநாடு தொகுதியில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினார்.



சிங்கம்புணரி ஒன்றிய நகர தி.மு.க. சார்பில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சிங்கம்புணரி அண்ணாமன்றத்தில் ரத்ததான முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் பூமிநாதன், பேரூராட்சி சேர்மன், அம்பல முத்து, துணை சேர்மன் இந்தியன், செந்தில், மு. சோமசுந்தரம், நகரச் செயலாளர் கதிர்வேல், அவைத் தலைவர் சிவகுமார், பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஆர்.புகழேந்தி, ஒன்றிய துணைச் செயலாளர் சேகர், பொருளாளர் பாஸ்கரன், குடோன்மணி, அலாவுதீன், மீனா, இளைஞரணி மனோகரன், அருண் பிரசாத், பிரேம்குமார், பொன் சரவணன், பரிஞ்சி சரவணன் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ்.கே. ராஜேந்திரன்
### டிசம்பர் 2 (1990)



தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்.

இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர்.

இராமநாதபுரம் நகர மக்களின் பேரன்பிற்கும் பெருமரியாதைக்கும் உரியவர்.

அன்பும் அடக்கமும் பண்பும் பணிவும் கொண்டவர்.

“இரக்கமற்ற சாவே! அடுக்குமா உனக்கு” எனக் கேட்டு தலைவர் கலைஞரை கண்ணீர் விடச் செய்தது இவரது மறைவு.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# 24-ஆம் ஆண்டு
# நினைவு அஞ்சலி

## வறுமையில் நேர்மை!
## வளமையில் எளிமை!!

டிசம்பர் 02 2023



# N.V.வீரய்யன் INA
அவர்கள்

**நகர தி.மு.க மு.அவைத் தலைவர்**
**நகரமன்ற மு.உறுப்பினர்**
**வர்த்தகர் சங்க மு.தலைவர்**

...நீங்கா நினைவுகளுடன்...

**வீரா.கணேசன்** B.Com.,
நகர கழகச் செயலாளர்.
மன்னார்குடி.

**வீரா.கதிரவன்** M.A., M.L.,
மூத்த வழக்குரைஞர்.
அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்
உயர்நீதிமன்றம் - மதுரை.